திரு. எல். பலராமன் : மாண்புமிகு அன்மச்சர் அவர்கள் அறிவித்த பட்டியலில் எல்லா மாவட்டத்துப் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லே. ஆகவே எல்லா மாவட்டப் பிரதிநிதிகளும் இருக்கக் கூடிய நிலேயில் அரசு மறு பரிசீலனை செய்யுமா? அவர்களுக்காக மேலும் ஒரு பட்டியலே இணக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது மாதிரி யோசனை அரசுக்குத் தற்போது இல்லே.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலேவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலேவர் : இன்று காலே 10 மணிக்குக் கூடிய சட்ட மன்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது.

15—3—1978 (புதன்கிழமை) 16—3—1978 (வியாழக்கிழமை)	கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.
17—3—1978 (வெள்ளிக்கிழமை)	வேளாண்மை மற்றும் பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.
18—3—1978 (சனிக்கிழமை)	அரசியலமைப்பு (44-வது திருத்த) சட்டத்திற்கு ஏற்பளித்தல்.
19—3—1978 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
20—3—1978 (திங்கட்கிழமை)	ஊராட்சி வளர்ச்சி மற்றும் சமுதாயநல வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் மீது விவாதம்.
21—3—1978 (செவ்வாய்க்கிழமை)	போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலே குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 15]

22—3—1978 (புதன்கிழமை)	நீதி மற்றும் சிறைச்சாலை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.
23—3—1978 (வியாழக்கிழமை) (பிற்பகல்)	1977-78-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல்.
	1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.
24—3—1978 (வெள்ளிக்கிழமை)	தூய வெள்ளிக்கிழமை—விடுமுறை.
25—3—1978 (சனிக்கிழமை)	தொழில் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.
26—3—1978 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
27—3—1978 (திங்கட்கிழமை)	1977-78-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையின் மீதும் 1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம்.
28—3—1978 (செவ்வாய்க்கிழமை)	மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் மீது விவாதம்.
29—3—1978 (புதன்கிழமை)	உணவு மற்றும் கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.
30—3—1978 (வியாழக்கிழமை)	நிதி சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
31—3—1978 (வெள்ளிக்கிழமை)	முற்பகல் : இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம். பிற்பகல் : பிரிவு உபசார உரை.

(முற்பகல் 11-10)

4. 82-வது விதியின்படி விவர அறிக்கை.

(1) பெரியார்—அண்ணா நினைவகம் குறித்து

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சார்ந்த 82-வது விதியின்கீழ் பின்வரும் அறிக்கையை அளிக்க நான் விழைகிறேன்.